மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 523/2022 |
| பெயர் | : | ராஜ் (PW2) |
| த/பெ | : | பரமசிவம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Kumaravel is present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the5th day of December 2023

<u>முதல் விசாரணை</u>

1)நான் வேப்பலோடையில் வசிக்கிறேன். நான் கீழ செய்தலையில் உள்ள அரசாங்க பள்ளியில் ஆசிரியராக பணி செய்கிறேன். அ.சா.1 செல்வத்தை தெரியும் .சாட்சி இருதய ராஜை தெரியும் அவர் என் உறவினர். இறந்து போன பெரியசாமியை தெரியும். அவர் என் உறவினர். எதிரியை தெரியாது.

2) 19.09.2017 அன்று மாலை 6.45 மணிக்கு எங்கள் தெருவில் உள்ள இளைஞர்கள் விபத்து நடந்ததாக தெரிவித்தார்கள். நான் அதனால் வேப்பலோடை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று பெரியசாமியை பார்க்க போனேன். அவர் அங்கு மிகவும் கவலைக்கிடமாக இருந்தார்.போலிசார் அங்கு வைத்து என்னுடைய ஊர், பெயர் கேட்டார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1.வேப்பலோடை ECR ரோட்டில் காமராஜர் சிலை உள்ளது என்றால் சரிதான். அதன் அருகில் டீக்கடை உள்ளது என்றால் சரிதான். எனக்கு 4 மணிக்கு பள்ளி முடிவடைந்து விடும் என்றால் சரிதான்.

2. 19.09.2017 அன்று மாலை 5.15 மணிக்கு நானும் சாட்சி இருதய ராஜும் மேற்படி டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்த போதுஇறந்து போன பெரியசாமி ரோட்டை கடக்க முயற்சித்த போது எதிரி அசோக் லேலாண்ட் காரை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி பெரியசாமி மீது மோதியதில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் இந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றாலும் நான் தான் காயம் பட்ட பெரியசாமியை சிகிச்சைக்காக

அழைத்து சென்றேன் என்றாலும் தற்போது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.